# April 3, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. காவல் துறையின் புதிய தலைமை இயக்குநராக (டிஜிபி) சந்தீப் ராய் ரத்தோர் வியாழக்கிழமை நியமனம் செய்யப்பட்டார்.

(i) அந்தப் பதவிக்கு காவலர் பயிற்சிப் பிரிவு டிஜிபியாக இருக்கும் சந்தீப் ராய் ரத்தோரை நியமனம் செய்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது. இதையடுத்து, சந்தீப் ராய் ரத்தோர் டிஜிபியாக பொறுப்பேற்றார்.

2. இந்தோனேசியாவின் வடக்கு மொலுக்கா கடல் பகுதியில் வியாழக்கிழமை அதிகாலை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த இயற்கை சீற்றத்தினால் கட்டடம் இடிந்து விழுந்து ஒருவர் உயிரிழந்தார்.

(i) பிலிப்பின்ஸ் கடற்கரையிலிருந்து 580 கி.மீ. தொலைவிலும், மலேசியாவின் சபா பகுதியிலிருந்து 1,000 கி.மீ. தொலைவிலும் நடுக்கடலில் 35 கி.மீ. ஆழத்தில் நிலைகொண்டிருந்த இந்த நிலநடுக்கம், ரிக்டர் அளவு கோலில் 7.6 அலகுகளாகப் பதிவானது.

(ii) இதைத் தொடர்ந்து, கடல் அலைகள் சீற்றத்துடன் காணப்பட்டதால் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டு, பின்னர் நிலைமை சீரானதைத் தொடர்ந்து அது விலக்கிக்கொள்ளப்பட்டது.

(iii) முதன்மை நிலநடுக்கத்தைத் தொடர்ந்து, அடுத்தடுத்து சுமார் 50 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டன.

(iv) நிலநடுக்கத்தின் எதிரொலியாக வடக்கு சுலவேசி உள்ளிட்ட 5 இடங்களில் கடல் மட்டம் உயர்ந்ததாக இந்தோனேசிய வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. அதிகபட்சமாக வடக்கு மினாஹாசாவில் 0.75 மீட்டர் உயரத்துக்கு அலைகள் எழுந்தன.

3. சுமார் அரை நூற்றாண்டு கால இடைவெளிக்குப் பிறகு, மனிதர்களை மீண்டும் நிலவுக்கு அழைத்துச் செல்லும் வரலாற்றுச் சிறப்புமிக்க ‘ஆர்டெமிஸ்-2’ திட்ட விண்கலத்தை அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

(i) கேப் ஃபுளோரிடா மாகாணம் கனாவரலில் உள்ள கென்னடி விண்வெளி மையத்திலிருந்து, இந்திய நேரப்படி வியாழக்கிழமை அதிகாலை 3.54 மணியளவில் இந்த ஏவுதல் நடைபெற்றது. 32 அடுக்கு மாடி உயரம் கொண்ட பிரம்மாண்டமான எஸ்.எல்.எஸ். ராக்கெட், 4 விண்வெளி வீரர்களுடன் நிலவை நோக்கிச் சீறிப் பாய்ந்தது.

(ii) இந்த முக்கியப் பயணத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த ரீட்வைஸ்மேன் (கமாண் டர்), விக்டர் க்ளோவர் (பைலட்), கிறிஸ்டினா கோச் (திட்ட விஞ்ஞானி), கனடாவைச் சேர்ந்த ஜெரிமி ஹேன்சன் (திட்ட விஞ்ஞானி) ஆகிய 4 வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

(iii) பூமிக்கும் நிலவுக்கும் இடையிலான பயணத்தில் சுமார் 4.06 லட்சம் தொலைவை இந்த விண்கலம் கடக்க உள்ளது. மனித வரலாற்றிலேயே விண்வெளியில் மனிதர்கள் மேற்கொள்ளும் மிக நீண்ட தொலைவுப் பயணம் இதுவாகும். இதற்கு முன்னதாக 1970-இல் 'அப் போலோ 13' விண்கலம் படைத்த சாதனையை இந்தப் பயணம் முறியடிக்க உள்ளது.

(iv) சுமார் 10 நாள்கள் நீடிக்கவுள்ள இந்த ஆய்வின்போது, விண்வெளி வீரர்கள் நிலவைச் சுற்றி வந்து, அதன் சுற்றுப்பாதையில் பல்வேறு சோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

குறிப்பாக, விண்கலத்தின் தானியங்கி கட்டுப்பாடுகள் செயலிழந்தால், அதை மனிதர்கள் எவ்வாறு கையாள்வது என்பதற்கான நேரடி ஒத்திகையை வீரர்கள் மேற்கொள்வர்.

(v) 1972-ஆம் ஆண்டுக்குப் பிறகு பூமியின் சுற்றுப்பாதையைத் தாண்டி தொலைதூர விண்வெளிப் பகுதிக்கு மனிதர்கள் செல்வது இதுவே முதல்முறை. 'நிலவில் மனிதர்கள் நிரந்தரமாகத் தங்குவதற்கான தளம் அமைப்பதற்கான முதல் படி இது என்று நாசா நிர்வாகி ஜாரெட் ஐசக்மேன் உற்சாகத்துடன் தெரிவித்தார்.

(vi) தனியார் நிறுவனங்களின் பங்களிப்பு:

- அமெரிக்காவின் முன்னணி தொழிலதிபர்களான எலான் மஸ்க்கின் ஸ்பேஸ்-எக்ஸ் மற்றும் ஜெஃப் பெசோஸின் ப்ளூ ஆரிஜின் போன்ற தனியார் நிறுவனங்களும் நிலவில் தரையிறங்கும் கலன்களை உருவாக்குவதில் நாசாவுடன் இணைந்து பணியாற்றி வருகின்றன.
- எதிர்காலத்தில் மனிதர்களைச் செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பும் திட்டத்துக்கு இந்தப்பயணம் ஒரு வலுவான அடித்தளமாக அமையும்.

4.இந்தியாவில் மாதாந்திர கைப்பேசி இணையப் பயன்பாடு முன்னெப்போதும் இல்லாத வகையில் கடந்த ஆண்டு புதிய உச்சத்தை எட்டியுள்ளது.

(i) கடந்த 2025-ஆம் ஆண்டில், ஒரு பயனர் மாதத்துக்கு சராசரியாக 31 ஜிபி இணைய தரவு பயன்படுத்தியுள்ளது நோக்கியா நிறுவனத்தின் ஆய்வறிக்கையில் தெரியவந்துள்ளது. இது முந்தைய 2024-இல் இருந்த 27.5 ஜிபி என்ற அளவைவிட 18 சதவீத வளர்ச்சியாகும்.

(ii) 5ஜி தொழில்நுட்பத்தின் ஆதிக்கம்:

- இந் தியாவின் ஒட்டுமொத்த கைப்பேசி இணைய போக்குவரத்தில் 5ஜி சேவையின் பங்களிப்பு 47 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- நாடு முழுவதும் 5ஜி இணையப் பயன்பாடு ஓராண்டில் 70 சதவீதம் அதிகரித்து, 12.9 எக்சாபைட் என்ற அளவை எட்டியுள்ளது. அதிவேக இணையம், ஏ.ஐ. செயலிகளின் பயன்பாடு, '4கே' தரத்திலான விடியோக்கள், ஆன்லைன் கேமிங் ஆகியவற்றின் மீதான ஆர்வம் இந்தப் பெருக்கத்துக்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது.

(ii) உலக அளவில் 2-ஆம் இடம்:

- இந்த வளர்ச்சியின்மூலம், உலகின் 2-ஆவது மிகப்பெரிய 5ஜி சந்தாதாரர்களின் தளத்தைக் கொண்ட நாடாக இந்தியா உருவெடுத் துள்ளது.
- அதேபோல், 5ஜி தரவு நுகர்வு மற்றும் 5ஜி 'ஃபிக்சட் வயர்லெஸ் அக்சஸ் (எஃப்.டபிள் யூ.எஸ்.)' பயன்பாட்டிலும் இந்தியா உலக அளவில் 2-ஆம் இடத்தில் உள்ளது. 5ஜி பயன்பாட்டில் எஃப்.டபிள்யூ.எஸ். மட்டும் 25 சதவீத பங்களிப்பை அளித்துள்ளது.

(iii) மலிவு விலை போன்களின் வருகை:

- சந்தையில் 100 டாலருக்கும் குறைவான விலையில் (சுமார் ரூ.9,300) கிடைக்கும் 5ஜி பட்ஜெட் ரக ஸ்மார்ட்போன்களின் வருகை 10 மடங்கு அதிகரித்துள்ளது.
- கடந்த ஆண்டில் விற்பனையான ஸ்மார்ட் போன்களில் 90 சதவீதத்துக்கும் அதிகமானவை 5ஜி தொழில்நுட்பத்தைக் கொண்டிருந்தன. தற்போது இந்தியாவில் உள்ள சுமார் 89 கோடி 4ஜி சாதனங்களில், 38 கோடிக்கும் அதிகமானவை 5ஜி வசதி கொண்டவை என ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

(iv) எதிர்காலக் கணிப்பு:

- பெருநகரங்களில் மட்டும் மொத்த இணைய பயன்பாட்டில் 58 சதவீதம் 5ஜி மூலமாகவே கிடைக்கிறது.
- வரும் 2031-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் 5ஜி சந்தாதாரர்களின் எண்ணிக்கை 100 கோடியைக் கடக்கும் என நோக்கியா கணித்துள்ளது.
- ஏ.ஐ.சார்ந்த பயன்பாடுகளும், அதிநவீன நெட்வொர்க் கட்டமைப்புகளும் இந்தியாவின் எண்ம பரிணாம வளர்ச்சியை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச்செல்லும் என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

5. இந்தியத் தொலைத்தொடர்பு சந்தையில் முன்னணி நிறுவனங்களுக்கு இடையே நிலவும் கடும் போட்டியில், புதிய வாடிக்கையாளர்களைச் சேர்ப்பதில் பார்தி ஏர்டெல் நிறுவனம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

(i) இந்தியத் தொலைத் தொடர்பு ஒழுங்கு முறை ஆணையம் (டிராய்) வெளியிட்ட பிப்ரவரி மாத புள்ளிவி வரங்களின்படி, ஏர்டெல் நிறுவனம் அந்த மாதத்தில் மட்டும் 50.88 லட்சம் புதிய சந்தாதாரர்களைத் தன்வசம் ஈர்த்து அசத்தியுள்ளது.

(ii) ஏர்டெல் நிறுவனத்தின் இந்த அபரிமிதமான வளர்ச்சியில் தொலைபேசி சேவைப் பிரிவு முக்கியப் பங்கு வகிக்கிறது. அந்நிறுவனம் வயர்லஸ் தொலைபேசி பிரிவில் 48.5 லட்சம் பயனர்களையும், தரை வழித் தொலைபேசி பிரிவில் 2.31 லட்சம் பயனாளர்களையும் கூடுதலாகப் பெற்றுள்ளது. அதேநேரம், ஜியோ நிறுவனம் 17.41 லட்சம் சந்தாதாரர்களைச் சேர்த்து 2-ஆம் இடத்தில் உள்ளது.

(iii) 5 ஆண்டுகளுக்குப் பிறகு...:

- கடந்த 5 ஆண்டுகளாக தொடர்ந்து சரிவைச் சந்தித்து வந்த வோடஃபோன் ஐடியா நிறுவனம், நீண்ட இடைவேளைக்குப் பிறகு மீண்டும் வளர்ச்சியை நோக்கித் திரும்பியுள்ளது.
- பிப்ரவரியில் இந்நிறுவனம் 21,927 புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துள்ளது. ஜனவரி மாதத்தில் சுமார் 4.11 லட்சம் சந்தாதாரர்களை இழந்த நிலையில், தற்போது ஏற்பட்டுள்ள இச்சிறு முன்னேற்றம் அந்நிறுவனத்துக்குப் பெரும் நம்பிக்கையை அளித்துள்ளது.

(iv) மொத்த நிலவரம்:

- நாட்டின் ஒட்டுமொத்தத் தொலைபேசி சந்தாதாரர்களின் எண்ணிக்கை 132.13 கோடியாக உயர்ந்துள்ளது. இது முந்தைய மாதத்தை விட 0.56 சதவீத வளர்ச்சியாகும்.
- தனியார் நிறுவனங்களான ஏர்டெல், ஜியோ, வோடஃபோன் ஐடியா, டாடா டெலிசர்வீசஸ் ஆகியவை வாடிக்கையாளர் எண்ணிக்கையை அதிகரித்துள்ளன. ஆனால், பொதுத் துறை நிறுவனங்களான பிஎஸ்என்எல், எம்டிஎன்எல் ஆகியவை தொடர்ந்து வாடிக்கையாளர்களை இழந்து வருகிறது.

(v) இணைய சேவை:

- இணைய சேவையைப் பொருத்தவரை, பிராட்பேண்ட் சந்தாதாரர்களின் எண்ணிக்கை 105.3 கோடியாக அதிகரித்துள்ளது.
- இத்துறையில் 51.96 கோடி பயனர்களுடன் ஜியோ முன்னிலையில் இருக்க, ஏர்டெல் 36.4 கோடி பயனர்களுடன் அதற்கு அடுத்த இடத்தில் உள்ளது. வோடஃபோன் ஐடியா 12.93 கோடி பயனர்களையும், பிஎஸ்என்எல் 2.8 கோடி பயனர்களையும் தற்போது

கொண்டுள்ளன.

6. 2025-26-ஆம் நிதியாண்டில் இந்தியா இதுவரை இல்லாத அளவுக்கு ரூ.38,424 கோடிக்கு பாதுகாப்புத் துறை சார்ந்த ஆயுதங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து சாதனை படைத்துள்ளது.

(i) அமெரிக்கா, ரஷியா போன்ற வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்களை முன்பு இந்தியா இறக்குமதி செய்து வந்தது. அந்த நிலை அண்மைக்காலமாக மாறி வருகிறது. இந்தியா சொந்தமாக உள்நாட்டி லேயே ஆயுதங்களைத் தயாரித்து, அதை நட்பு நாடுகளுக்கும், வெளிநாடுகளுக்கும் விற்பனை செய்து வருகிறது. இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவுகளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

- இந்தியா கடந்த 2023-24-ஆம் நிதியாண்டில் ரூ.21,083 கோடிக்கு வெளிநாடுகளுக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்தது. பின்னர் கடந்த 2024-25-ஆம் நிதியாண்டில் ரூ.23,622 கோடிக்கு வெளிநாடுகளுக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்திருந்தது.
- 2025-26-ஆம் நிதியாண்டில் ரூ.38,424 கோடிக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்துள்ளது. இது முந்தைய நிதியாண்டில் செய்யப்பட்ட ஆயுத ஏற்றுமதியுடன் ஒப்பிடுகையில் ரூ.14,802 கோடி அதிகமாகும். அதாவது, நமது ஆயுத ஏற்றுமதி முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் 62 சதவீதத்துக்கும் மேல் அதிகரித்துள்ளது.
- இது இதுவரை இல்லாத அளவுக்கு அதிக ஏற்றுமதியாகும். இந்திய ஆயுத ஏற்றுமதியில் பொதுத் துறை நிறுவனங்கள் 54.84 சதவீதமும், தனியார் நிறுவனங்கள் 45.16 சதவீதமும் பங்களிப்பு அளித்துள்ளன. இந்திய ஆயுத ஏற்றுமதி மிகப்பெரிய அளவில் அதிகரித்திருப்பதற்கு, இந்தியா சொந்தமாகத் தயாரிக்கும் பாதுகாப்புத் தளவாடங்கள் மீதும், நவீன ஆயுத தயாரிப்பு வலிமையின் மீதும் வெளிநாடுகள் வைத்துள்ள நம்பிக்கை அதிகரித்திருப்பதையே காட்டுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

7. பிரதமர் நரேந்திர மோடியை ரஷிய முதல் துணைப் பிரதமர் டெனிஸ் மன்டுரோவ் நேரில் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார்.

(i) அப்போது ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் இந்தியா-ரஷியா 23-ஆவது வருடாந்திர மாநாட்டில் பங்கேற்க இந்தியா வந்ததை நினைவுகூர்ந்தார்.

(ii) இதுதொடர்பாக மத்திய அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

- இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ரஷிய முதல் துணைப் பிரதமர் டெனிஸ் மன்டுரோவ் பிரதமர் மோடியை சந்தித்து வர்த்தகம், பொருளாதாரம், உரங்கள் உள்ளிட்ட பலவேறு துறைகளில் இருதரப்பு உறவு மேம்பட்டுவருவதை எடுத்துரைத்தார்.
- அப்போது கடந்த ஆண்டு இறுதியில் நடைபெற்ற வருடாந்திர மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட இருதரப்பு ஒப்பந்தங்களை அமல்படுத்துவதற்காக எடுக்கப்படும் முயற்சிகள் திருப்தியளிப்பதாக பிரதமர் மோடி தெரிவித்தார்.
- இந்தியா-ரஷியா இருதரப்பு உறவு மேலும் வலுப்படும் என நம்பிக்கை தெரிவித்த பிரதமர் மோடி ரஷிய அதிபர் விளாதிமீர் புதினுடன் பல்வேறு விவகாரங்கள் குறித்து கலந்துரையாட ஆவலோடு இருப்பதாக கூறினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

8. குடிமக்கள் நலனுக்கு முன்னுரிமை என்ற நோக்கத்தை சிறப்பாக முன்னெடுத்துச்

செல்லும் வகையில் அரசு நிர்வாக முறை காலத்துக்கு ஏற்ப முன்னேறவும் மாறவும் வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

- இந்திய குடிமைப் பணியின் திறனை மேம்படுத்த 'சாதனா சப்தாஹ' என்ற பெயரில் ஒருவார கால (ஏப். 2 முதல் 8) தேசிய சிறப்பு முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் அரசு ஊழியர்களின் திறனை மேம்படுத்துவது, தொழில்நுட்ப மேம்பாடு, குடிமக்களின் நன்மையை முதன்மையாகக் கொள்வது ஆகியவை முக்கிய அம்சங்களாக உள்ளன.
- அரசு ஊழியர்கள் மேம்பட வேண்டும்: செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) வருகையால் உலகில் தொழில்நுட்ப மாற்றங்கள் இன்னும் வேகமாகும். ஒரு நல்ல நிர்வாகியும் அரசு ஊழியரும் தொழில்நுட்பம், தரவு பற்றிய ஆழமான புரிதலைக் கொண்டிருக்க வேண்டும். ஏனெனில், அவர்கள் முக்கிய முடிவுகளை எடுக்க அதுவே அடிப்படையாக இருக்கும்' என்றார்.

9. முக்கியமான பெட்ரோலிய ரசாயன (பெட்ரோ கெமிக்கல்) பொருள்கள் இறக்குமதிக்கு வரும் ஜூன் 30-ஆம் தேதி வரை வரிவிலக்கை மத்திய அரசு அறிவித்துள்ளது.

(i) மேற்காசிய போர் தாக்கத்தால் பெட்ரோ கெமிக்கல் பொருள்கள் விநியோகத்தில் பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்கவும், நுகர்வோர் பாதிக்கப்படாமல் இருக்கும் நோக்கிலும் இந்த நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

(ii) இதன்மூலம், பெட்ரோலிய ரசாயனப் பொருள்களைச் சார்ந்துள்ள பிளாஸ்டிக் உற்பத்தி, பேக்கேஜிங், ஜவுளி, மருந்து உற்பத்தி, ரசாயன உற்பத்தி, வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி மற்றும் பிற உற்பத்தி சார்ந்த துறைகள் பலனடையும்.

(iii) அதே நேரம், இந்த வரி விலக்கு காரணமாக அரசுக்கு ரூ.1,800 கோடி வரை இழப்பு ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10. பிரபல ஓவியர் ராஜா ரவி வர்மா வரைந்த 'யசோதையும் கிருஷ்ணனும்' ஓவியம் ரூ.167.20 கோடிக்கு ஏலத்தில் விற்பனையானது.

(i) மும்பையில் இதுதொடர்பான ஏலம் புதன்கிழமை நடைபெற்றது. அப்போது ஆயில் பெயிண்டில் வரையப்பட்ட அந்த ஓவியம், இதுவரை இல்லாத அதிக விலைக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டது. இதற்கு முன்பு எம்.எஃப். ஹுசேன் வரைந்த கிராம் யாத்ரா ஓவியம் ரூ.118 கோடிக்கு ஏலத்தில் விற்பனையானதே சாதனையாக இருந்தது. அதை ராஜா ரவி வர்மாவின் ஓவியம் முறியடித்துள்ளது.

(ii) 'யசோதையும் கிருஷ்ணனும்' ஓவியம் ரூ.80 கோடி முதல் ரூ.120 கோடி வரை ஏலத்தில் விற்பனையாகலாம் என மதிப்பிடப் பட்டிருந்தது. எனினும், எதிர்பார்த்ததைவிட அதிக விலைக்கு தொழிலதிபர் டாக்டர் சைரஸ் எஸ். பூனாவாலா ஏலத்தில் எடுத்துள்ளார்.

(iii) 1890-களில் வரையப்பட்ட அந்த ஓவியம், பாலகிருஷ்ணருக்கும், அவரின் தாய் யசோதைக்கும் இடையேயான பாசத்தை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. கேரளத்தின் திருவிதாங்கூர் அரச குடும்பத்தைச் சேர்ந்த ராஜா ரவி வர்மாவின் சிறந்த ஓவியங்களில் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகிறது.

11. முன்கூட்டியே விடுதலை மற்றும் தண்டனையைக் குறைப்பது தொடர்பான மாநில அமைச்சரவையின் முடிவுக்கு ஆளுநர் கட்டுப்பட்டவர்; அமைச்சரவை முடிவை நிராகரிக்க ஆளுநருக்கு அதிகாரம் கிடையாது என சென்னை உயர்நீதிமன்ற முழு அமர்வு தீர்ப்பளித்தது.

(i) அண்ணாமலை பல்கலைக்கழக மாணவர் நாவரசு கொலை வழக்கில் ஜான் டேவிட்டுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. ஜான் டேவிட்டை முன்கூட்டியே விடுதலை செய்யக் கோரிய மனுவை ஆளுநர் நிராகரித்தார். இதை எதிர்த்து ஜான்டேவிட்டின் தாயார் எஸ்தர் சென்னை உயர்நீதி மன்றத்தில் ஆள்கொணர்வு மனு தாக்கல் செய்தார்.

(ii) இந்த வழக்கை விசாரித்த நீதிபதி எஸ்.எம்.சுப்பிரமணியம் தலைமையிலான அமர்வு, முன்கூட்டியே விடுதலை செய்யும் தமிழக அரசின் பரிந்துரையை ஆளுநர் நிராகரித்தது தவறு. அதற்கு ஆளுநருக்கு அதிகாரம் இல்லை. எனவே, உயர்நீதிமன்றம் தீர்ப்பு ஜான் டேவிட்டை முன்கூட்டியே விடுதலை செய்யும் பரிந்துரையை ஆளுநர் பரிசீலிக்க வேண்டும் என உத்தரவிட்டது.

12. இந்தியாவில் காவலில் நிகழும் சித்திரவதைகள் குறித்த ஆய்வு

(i) சட்ட மற்றும் புள்ளிவிவரப் பின்னணி (2010–2021)

- 2010 சித்திரவதை தடுப்பு மசோதா: சித்திரவதையைத் தடுப்பதற்கான ஒரு மசோதா 2010-ஆம் ஆண்டில் மக்களவையில் நிறைவேற்றப்பட்டது; ஆனால், மாநிலங்களவை (Rajya Sabha) அதனை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளத் தவறியதால், அம்மசோதா காலாவதியாகிவிட்டது.
- 2016–2021 தேசியப் புள்ளிவிவரங்கள்: 2021-ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் மத்திய உள்துறை இணையமைச்சர் அளித்த அறிக்கையின்படி, 2016-17 மற்றும் 2020-21 ஆகிய காலகட்டங்களுக்கு இடைப்பட்ட காலத்தில், இந்தியாவில் காவல்துறை காவலில் 11,419 மரணங்கள் நிகழ்ந்துள்ளன.
- தினசரி உயிரிழப்பு விகிதம்: இந்தத் தரவுகளின்படி, இந்தியாவில் சராசரியாக ஒவ்வொரு நாளும் ஐந்துக்கும் மேற்பட்டோர் காவல்துறை சித்திரவதையால் உயிரிழக்கின்றனர்.
- 2017 சட்ட ஆணையத்தின் வரைவு மசோதா: 2017-ஆம் ஆண்டில், சித்திரவதையைத் தடுப்பதற்கான ஒரு வரைவு மசோதாவை இந்தியச் சட்ட ஆணையம் தயாரித்து, அதனைச் சட்டமாக இயற்றப் பரிந்துரைத்தது; எனினும், அம்மசோதா இன்றும் சட்ட அமைச்சகத்தின் கோப்புகளிலேயே நிலுவையில் உள்ளது.
- தண்டனைகள் இன்மை (2018–2021): 2018 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், காவல்துறை காவலில் நிகழ்ந்த மரணங்கள் எதற்கும், ஒரு காவல்துறை அதிகாரி கூட தண்டிக்கப்படவோ அல்லது குற்றவாளியாக அறிவிக்கப்படவோ இல்லை என்று தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

(ii) சாத்தான்குளம் சம்பவம் (ஜூன் 2020)

- கைது நடவடிக்கை (ஜூன் 19, 2020): தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளத்தில் அலைபேசி விற்பனைக் கடை ஒன்றை நடத்தி வந்த ஜெயராஜ் (58) மற்றும் அவரது மகன் பென்னிக்ஸ் (31) ஆகியோர், கோவிட்-19 ஊரடங்கு விதிமுறைகளை மீறிச் செயல்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு, காவல்துறை காவலில் எடுத்துக்கொள்ளப்பட்டனர்.
- காவலில் நிகழ்ந்த சித்திரவதை: சாத்தான்குளம் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தபோது, தந்தையும் மகனுமாகிய அவ்விருவரும் இரவு முழுவதும் மிகக் கடுமையான உடல்ரீதியான வன்முறைக்கு ஆளாக்கப்பட்டனர்.
- துயரமான முடிவு: நீதிமன்றக் காவலில் (Judicial Custody) அடைக்கப்பட்ட பின்னர், தங்களுக்கு ஏற்பட்ட காயங்களின் தீவிரத்தன்மை காரணமாக, ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவரும் சில நாட்களிலேயே கோவில்பட்டி அரசு

மருத்துவமனையில் உயிரிழந்தனர்.

(iii) சட்ட நடவடிக்கைகள் மற்றும் அரசு சார்ந்த முன்னெடுப்புகள் (2020–2026)

- நீதித்துறை தலையீடு: சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளை, இச்சம்பவத்தை “suo motu” (தானாக முன்வந்து) விசாரணைக்கு எடுத்துக்கொண்டது; இதன் விளைவாக, தமிழக அரசு இவ்வழக்கின் விசாரணையை சிபிஐ-க்கு (CBI) மாற்றியது.
- குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகள்: ஆய்வாளர் ஸ்ரீதர் மற்றும் உதவி ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகு கணேஷ் உள்ளிட்ட பத்து காவல்துறைப் பணியாளர்கள் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன. குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகளில் ஒருவர் (பால் துரை), விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்தபோதே உடல்நலக்குறைவு காரணமாக உயிரிழந்தார்.
- தீர்ப்பு (மார்ச் 2026): 2026 ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் தேதி, நீதிபதி சி. முத்துக்குமரன் தலைமையிலான மதுரை முதல் கூடுதல் அமர்வு நீதிமன்றம், எஞ்சியிருந்த ஒன்பது காவல்துறை அதிகாரிகளும் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளித்தது.
- தண்டனை அறிவிப்பில் தாமதம்: தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தபோதிலும், குற்றவாளிகளுக்கான குறிப்பிட்ட தண்டனையை அறிவிக்கும் நிகழ்வு முதலில் மார்ச் 30-ஆம் தேதிக்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மனநிலை மற்றும் சொத்து விவரங்கள் குறித்த அறிக்கைகளைப் பெறுவதற்காக, தண்டனை அறிவிப்பு 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 6 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.
- சிபிஐ-யின் மரண தண்டனைக் கோரிக்கை: 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 2 ஆம் தேதி, நீதிமன்றத்தின் முன் வாதாடிய சிபிஐ தரப்பு, இச்சம்பவத்தை "மிகவும் அரிதான" மற்றும் மனிதாபிமானமற்ற கொடூரச் செயல் என விவரித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அதிகபட்ச தண்டனையான மரண தண்டனையே வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது.

(iv) நிறுவன ரீதியான விமர்சனங்களும் பரிந்துரைக்கப்பட்ட தீர்வுகளும்

- பாதுகாப்பு வழிமுறைகளின் தோல்வி: பாதிக்கப்பட்டவர்களைக் காவலில் வைக்க (remand) உத்தரவிட்ட நீதித்துறை நடுவரும், அவர்கள் உடல்நலத்துடன் இருப்பதாகச் சான்றிதழ் வழங்கிய மருத்துவ அதிகாரியும், பாதிக்கப்பட்டவர்களின் உடலில் இருந்த கடுமையான காயங்களைக் கவனிக்கவோ அல்லது அவற்றை ஆவணப்படுத்தவோ தவறிவிட்டனர்.
- சட்டமியற்றுதலில் நிலவும் அக்கறையின்மை: உச்ச நீதிமன்றம், சட்ட ஆணையம் மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் (NHRC) ஆகியவை பல்வேறு பரிந்துரைகளை வழங்கியிருந்தபோதிலும், காவல்துறை அதிகாரிகள் மேற்கொள்ளும் சித்திரவதைகளுக்கு அவர்களைத் தனிப்பட்ட முறையில் பொறுப்பாக்கும் வகையிலான ஒரு பிரத்யேகச் சட்டத்தை இந்திய அரசு இதுவரை இயற்றவில்லை.
- "அத்தியாவசியமான மறுபரிசீலனை": காவல்துறை அதிகாரிகளும் அவர்களுக்குத் துணைநின்றவர்களும் சித்திரவதைகளில் ஈடுபடும்போது, அவர்களைச் சட்டரீதியாகப் பொறுப்பாக்கும் வகையிலான ஒரு குறிப்பிட்ட சட்டம் இயற்றப்படும் வரை, இத்தகைய குற்றங்களுக்காக வழங்கப்பட்ட தண்டனைகளின் எண்ணிக்கை 'பூஜ்யம்' (zero) என்ற அளவிலேயே இருப்பதாக NCRB-யின் தரவுகள் தொடர்ந்து சுட்டிக்காட்டி வரும்.

13. மாற்று ஆற்றல் இன்றியமையாதது

(i) ஒரு ஆயுதமாக ஆற்றலின் காலவரிசைப் பின்னணி

- 1970: இக்காலகட்டம் முதல், கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு ஆகியவை புவிசார் அரசியல் ஆதிக்கத்திற்கான கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன; உதாரணமாக, ஐரோப்பாவைத் தன் செல்வாக்கிற்குள் கொண்டுவர ரஷ்யா எரிவாயு விநியோகத்தைப் பயன்படுத்தத் தொடங்கியது.
- 1973: அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில், மத்திய கிழக்கு எண்ணெய் உற்பத்தி நாடுகள் எண்ணெய் விநியோகத்தை வெகுவாகக் குறைத்தன.
- 1973-இன் விளைவுகள்: பெட்ரோல் மற்றும் டீசல் விலைகள் நான்கு மடங்காக உயர்ந்தன; இதனால் உலகப் பொருளாதாரங்கள் முழுமையாக முடங்கிப்போயின.
- 2015 (நேபாளம்): நேபாளத்திற்கான கச்சா எண்ணெய் இறக்குமதியை இந்தியா தடை செய்தபோது, அந்நாடு தனது மின்சார வாகனங்களின் (EVs) எண்ணிக்கையை வெகுவாக அதிகரிப்பதன் மூலம் அதற்குப் பதிலளித்தது. இதன் விளைவாக, நேபாளத்தின் எண்ணெய் இறக்குமதிச் சார்புநிலை தற்போது குறைந்து வருகிறது.
- 2022: சர்வதேச மோதல்களின்போது, எரிவாயு விநியோகம் மீண்டும் ஒரு அரசியல் ஆதிக்கக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டது.
- 2026 (சமீப வாரங்கள்): ஈரானின் மீது சமீபத்தில் நடைபெற்ற தாக்குதல்களுக்கு முன்பு, ஒரு பேரல் கச்சா எண்ணெய் சுமார் $68 (₹6,295) என்ற விலையில் வர்த்தகம் செய்யப்பட்டது. மோதல்கள் தொடங்கியதைத் தொடர்ந்து, விலைகள் $100 (₹9,258)-க்கும் மேலாக உயர்ந்தன.

(ii) உலகளாவிய எண்ணெய் சார்ந்த பாதிப்புநிலைகள் குறித்த உண்மைகள்

- ஹார்முஸ் குறுகல்வாய் (Hormuz Chokepoint): உலகளாவிய கச்சா எண்ணெய் வர்த்தகத்தில் சுமார் 20 சதவீதம், ஹார்முஸ் குறுகல்வாய் எனப்படும் குறுகிய கடல்வழிப் பாதையின் வழியாகவே செல்கிறது. இந்த நீர்வழியை மூடுவதற்கான எந்தவொரு அச்சுறுத்தலும், உண்மையான விநியோகத் தடைகள் ஏற்படுவதற்கு முன்பாகவே, விலைகளில் உடனடி உயர்வை ஏற்படுத்துகிறது.
- சார்புநிலை விகிதம்: உலகின் மக்கள் தொகையில் நான்கில் மூன்று பங்கினர், தங்கள் போக்குவரத்து மற்றும் தொழில்துறைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள கச்சா எண்ணெயை இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ள நாடுகளிலேயே வாழ்கின்றனர்.
- 'சீன மாதிரி' (The China Model): பெய்ஜிங் நகரில், கடந்த ஆண்டில் புதிதாகப் பதிவு செய்யப்பட்ட கார்களில் 50 சதவீதம் மின்சார வாகனங்களாகும்; தற்போது அந்நகரின் மொத்த வாகன எண்ணிக்கையில் மின்சார வாகனங்கள் 12 சதவீத இடத்தைப் பிடித்துள்ளன.
- 'கியூபா மாற்றம்' (The Cuba Shift): அமெரிக்காவின் அழுத்தத்தின் காரணமாக எண்ணெய் விநியோகம் குறைந்த சூழலில், கியூபா நாடு கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் சீனாவிலிருந்து 34 மடங்கு அதிகமான சூரிய மின்சக்தித் தகடுகளை (solar panels) இறக்குமதி செய்துள்ளது.

(iii) மாற்று ஆற்றலின் உத்திசார் மற்றும் அறிவியல்சார் நன்மைகள்

- போர்க்கால உறுதித்தன்மை: ஆற்றல் துறை வல்லுநர்கள், உள்கட்டமைப்பு சார்ந்த பாதிப்புநிலைகளில் ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாட்டைச் சுட்டிக்காட்டுகின்றனர். ஒரே ஒரு ஏவுகணை மூலம் ஒரு பிரம்மாண்டமான நிலக்கரி மின் நிலையத்தை முடக்க முடியும்; ஆனால், அதற்கு இணையான மின் உற்பத்தித் திறன் கொண்ட, பரவலாக அமைக்கப்பட்ட ஒரு காற்றாலைப் பண்ணையை அழிக்க

வேண்டுமெனில், 40 ஏவுகணைகள் தேவைப்படும்.

- புவியியல் சார்ந்த நெகிழ்வுத்தன்மை: ஹார்முஸ் போன்ற குறிப்பிட்ட கடல் வழித்தடங்களையே சார்ந்திருக்கும் எண்ணெயைப் போலன்றி, மாற்று ஆற்றலுக்கான உதிரிபாகங்களை (சூரிய மின் தகடுகள் மற்றும் காற்றாலைத் turbines) பல வழித்தடங்கள் வழியாகக் கொண்டு செல்ல இயலும்.
- உள்ளூர் உற்பத்தி: மாற்று ஆற்றல் முறைகள், ஒரு நாட்டின் எல்லைகளுக்குள்ளேயே ஒப்பீட்டளவில் குறைந்த நிலப்பரப்பைப் பயன்படுத்திப் பெருமளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய வழிவகுக்கின்றன; இது நாட்டின் எரிசக்திப் பாதுகாப்பை வலுப்படுத்துகிறது.

(iv) முடிவுரை மற்றும் தீர்வுகள்

- போக்குவரத்துத் துறையின் மின்மயமாக்கல்: உலகளாவிய கச்சா எண்ணெய் தேவையைக் குறைப்பதற்கான முதன்மையான வழி, போக்குவரத்துத் துறையை மின்மயமாக்குவதே ஆகும்.
- உத்திசார் அவசியம்: புதுப்பிக்கத்தக்க ஆற்றல் முறைக்கு மாறுவது என்பது வெறும் ஒரு சுற்றுச்சூழல் சார்ந்த தேர்வாக மட்டுமல்லாமல், உலகளாவிய "கச்சா எண்ணெய் அரசியலின்" கணிக்க முடியாத தன்மையிலிருந்து ஒரு நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்கான, உயிர்வாழ்வுக்கு இன்றியமையாத ஒரு உத்தியாகவும் விவரிக்கப்படுகிறது.